# ஏப்ரல் 30 - செவ்வாய்

### தூய 5ம் பத்திநாதர்

### “அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறுவர்” - யோவா3:15

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 4 : 32 – 37

அந்நாட்களில் நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர். அவர்களுள் எவரும் தமது உடைமைகளைத் தம்முடையதாகக் கருதவில்லை எல்லாம் அவர்களுக்குப் பொதுவாய் இருந்தது. திருத்தூதர் அனைவரும் ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்தார் என மிகுந்த வல்லமையோடு சான்று பகர்ந்து வந்தனர். அவர்கள் அனைவரும் மக்களின் நல்லெண்ணத்தை மிகுதியாகப் பெற்றிருந்தனர். தேவையில் உழல்வோர் எவரும் அவர்களுள் காணப்படவில்லை. நிலபுலன்களை அல்லது வீடுகளை உடையோர் அவற்றை விற்று அந்தத் தொகையைக் கொண்டு வந்து திருத்தூதருடைய காலடியில் வைப்பர் அது அவரவர் தேவைக்குத் தக்கவாறு பகிர்ந்து கொடுக்கப்படும். சைப்பிரசு தீவைச் சேர்ந்த யோசேப்பு எனும் லேவியர் ஒருவர் இருந்தார். இவருக்குத் திருத்தூதர்கள் ”ஊக்குவிக்கும் பண்பு கொண்டவர்” என்று பொருள்படும் பர்னபா என்னும் பெயரைக் கொடுத்திருந்தார்கள். அவர் தமது நிலத்தை விற்று அந்தப் பணத்தைக் கொண்டுவந்து திருத்தூதர்களது காலடியில் வைத்தார்.

**பதில்பாடல்:** ஆண்டவர் ஆட்சி செய்கின்றார். மாட்சியை ஆடையாய் அணிந்துள்ளார்.

## நற்செய்தி : யோவான் 3 : 7 - 15

அக்காலத்தில் இயேசு நிக்கோதேமிடம் கூறியது : நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உமக்குக் கூறியது பற்றி நீர் வியப்படைய வேண்டாம். காற்று விரும்பிய திசையில் வீசுகிறது. அதன் ஓசை உமக்குக் கேட்கிறது. ஆனால் அது எங்கிருந்து வருகிறது என்றும் எங்கு செல்கிறது என்றும் உமக்குத் தெரியாது. தூய ஆவியால் பிறந்த அனைவருக்கும் இது பொருந்தும்” என்றார். நிக்கதேம் அவரைப் பார்த்தது, ”இது எப்படி நிகழ முடியும்?” என்று கேட்டார். அதற்கு இயேசு கூறியது ”நீர் இஸ்ரயேல் மக்களிடையே போதகராய் இருந்தும் உமக்கு இது தெரிவில்லையே! எங்களுக்குத் தெரிந்ததைப் பற்றியே பேசுகிறோம் நாங்கள் கண்டதைப் பற்றியே சான்று பகர்கிறோம். எனினும் எங்கள் சான்றை நீங்கள் ஏற்றுக் கொள்வதில்லை என உறுதியாக உமக்குச் சொல்கிறேன். மண்ணுலகு சார்ந்தவை பற்றி நான் உங்களுக்குச் சொன்னதை நீங்கள் நம்பவில்லை என்றால் விண்ணுலகு சார்ந்தவை பற்றிச் சொல்லும் போது எப்படி நம்பப்போகிறீர்கள்? ”விண்ணகத்திலிருந்து இறங்கி வந்துள்ள மானிட மகனைத் தவிர வேறு எவரும் விண்ணகத்திற்கு ஏறிச் சென்றதில்லை. பாலைநிலத்தில் மோசேயால் பாம்பு உயர்த்தப்பட்டது போல மானிடமகனும் உயர்த்தப்பட வேண்டும். அப்போது அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறுவர்” என்றார்.

**தியானம் :** இன்றைய நற்செய்தியினை நாம் தியானிப்பதாயின் அதன் முற்பகுதியை நன்கு வாசித்தல் வேண்டும். ஏனெனில் “நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும்” (யோவான் 3:7) என இறைமகன் இயேசு நிக்கதேம் என்பவருக்கு மட்டுமல்ல. “கத்தோலிக்கர்கள் என முகவரி சூட்டியுள்ள” எமக்கும் கூறியதாகும். திருமுழுக்கின் வழியாக கிறிஸ்துவின் திரு உடலில் ஒன்றாக நாமனைவரும் இணைக்கப்பட்டுள்ளதனால் குழந்தைப் பருவத்தில் எமது திருமுழுக்கின் அர்த்தம் மறுபடியும் பிறத்தல். அதாவது கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறத்தல் என்பதாகும். திருமுழுக்கின் போது எம்மீது ஊற்றப்படும் தண்ணீரின் அடையாளத்தால் நாம் கிறிஸ்துவோடு இறந்து, தூய ஆவியின் ஆற்றலால் புத்துயிர் பெற்று உயிர்த்தெழுகின்றோம் (யோவான்3:8) இதுவே எமது மறுபிறப்பு. கிறிஸ்துவுக்குள் உருவாக்கப்படும் புதுவாழ்வு நாம் விரும்பியவாறு ஏதோ திடீரென தன்னிச்சையாக உருவாவதில்லை. அப்படியான ஒரு புதுவாழ்விற்கு நாம் எமது விசுவாசத்திற்குள் நிலைத்திருந்து வாழவேண்டும். மறுபடியும் பிறத்தல் எனப்படுவது இறை ஆவியின் வல்லமையால் எம்முள்ளே உருவாக்கப்பட்டாலும், ஆவியானவரது வல்லமை எம்மில் செயல்பட நாம் அனுமதிக்கவேண்டும். அதற்காக அனுதினமும் செபத்தில் நிலைத்திருந்து பாவமற்ற வாழ்வு வாழவேண்டும். எமது செபவேளையில் இறைமகன் இயேசுவின் குரலைக் கேட்பதற்கு இறைமகன் இயேசு எம்மோடு பேசும் பிள்ளைகளாக நாம் மறுபடியும் பிறக்கவேண்டும். இவ்வாழ்வையே இறைமகன் இயேசுவும் “நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும்” எனத் தெளிவுபடுத்துகின்றார். மாறாக “மறுபடியும் பிறத்தல்” என்பது, ஒருசிலர் கூறுவது போன்று தண்ணீருக்குள் மூழ்கி எழுவது மட்டுமல்ல. மறுபடியும் பிறத்தல் எனப்படும் வாழ்வு சொல்லில் அல்ல, மாறாக் அதாவது வாழ்ந்து காட்டலில் தங்கியுள்ளது. எனவே இறைமகன் இயேசுவின் வார்த்தைகளில் தெளிவான சிந்தனை உள்ள மக்களாக நாமும் மறுபடியும் பிறந்து இறையாட்சியைக்காண வரம்வேண்டுவோம்.